2019

2019

No. of Printed Pages : 4

401484

**1706**

*Register Number* | | | | | | | |

இரண்டாம் ஆண்டு

# கற்றலை எளிதாக்குதலும் மேம்படுத்துதலும்

# FACILITATING AND ENHANCING LEARNING

(Tamil Version)

கால அளவு : 3 மணி நேரம்

மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அவற்றை அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

## பகுதி - அ

**I.** **அனைத்து** வினாக்களுக்கும் ஒவ்வொன்றிற்கும் **100** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **15x2=30**

1. கருவிப் பெட்டி தயாரிக்கும் போது நினைவில் கொள்ள வேண்டிய கருத்துக்கள் இரண்டினை கூறுக.

2. முப்பரிமாணக் கருவிகள் யாவை ?

3. ஒரு மாணவன் தேர்வில் பெற்ற மதிப்பெண்கள் முறையே தமிழ் 60, ஆங்கிலம் 40, கணிதம் 75, அறிவியல் 80 மற்றும் சமூக அறிவியல் 70. இவ்விவரத்திற்கான வட்ட வரைபடம் வரைக.

4. இரண்டு புலன்களை, தூண்டும் பொருட்களின் வகுப்பறை பயன்களை கூறுக.

5. மெல்ல கற்போரின் கல்வி முன்னேற்றத்தில் ஆசிரியரின் பங்கினைக் குறிப்பிடுக.

[ Turn over

6. பல்நிலை கற்பித்தல் என்றால் என்ன ?

7. ஆசிரியர் - மாணவர்களுக்கிடையே எந்தச் சூழலில் கற்றல் நிகழ்கிறது ?

8. மனவெழுச்சி நுண்ணறிவின் உட்கூறுகள் யாவை ?

9. உடன்பாட்டு மனப்பான்மையினை மாணவனிடம் எவ்வாறு வளர்க்கலாம் ?

10. மாணவர்களிடையே பேசுதல் திறனை வளர்க்க மேற்கொள்ள வேண்டிய செயல்பாடுகள் யாவை ?

11. நேர்காணல் மூலம் ஒரு மாணவனின் நடத்தையை எவ்வாறு மதிப்பிடலாம் ?

12. தேர்வு மற்றும் ஒப்படைப்புகளை மதிப்பிடும் போது மதிப்பெண் வழங்குவதைவிட கருத்துரையே சிறந்தது. ஏன் ?

13. கீழே கொடுக்கப்பட்டுள்ளவை என்ன குறைபாடு என்று கண்டுபிடிக்க.

(அ) பிழையோடு வாசித்தல்

(ஆ) எழுதும் போது வார்த்தைகளிலுள்ள பெரிய எழுத்துகளையும், சிறிய எழுத்துகளையும் கலந்து எழுதுதல்

14. செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளின் கற்றல் திறனை மேம்படுத்தும் கருவிகள் ஏதேனும் நான்கினை கூறுக.

15. கீழ்க்கண்ட உடல் இயக்க குறைபாட்டை எவ்வாறு கண்டறிவாய் ?

(அ) இளம்பிள்ளை வாதம்

(ஆ) கவட்டைக் கால்

## பகுதி - ஆ

II. **எவையேனும் பத்து** வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் **200** வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **10x4=40**

16. ஏதேனும் ஒரு பாடப்பகுதியை கற்பிக்க கிளை விளக்கப்படம் மற்றும் தொடர் விளக்கப்படம் வரைக.

17. கற்பித்தல் கற்றலில் தொழில்நுட்பக் கருவிகளால் ஏற்படும் பயன்கள் யாவை ?

18. உனது வகுப்பறையை பாதுகாப்பான மற்றும் சுதந்திரமான வகுப்பறையாக எவ்வாறு மாற்றுவாய் ?

19. வகுப்பறை - ஒரு சிந்தனை செயல் களம் - விவாதிக்கவும்.

20. உன் வகுப்பறை பல்வகுப்பு பயிற்றுவித்தல் சூழ்நிலையில் இருந்தால் நீவிர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் யாவை ?

21. உன் வகுப்பறைணீ/பள்ளி சூழலை மேம்படுத்த சமுதாயம் மற்றும் தொண்டு நிறுவனங்களை எவ்வாறு ஒருங்கிணைப்பாய் என்பதை விளக்குக.

22. உன் வகுப்பறையில் எளிய உளவியல் உத்திகள் மூலம் விழுமங்களை எவ்வாறு வளர்க்கலாம் என்பதை விளக்குக.

23. மாணவர்களின் அடைவினை கண்டறிய பயன்படுத்தும் தேர்வின் வகைகள் யாவை ?

24. அளவைக்குட்பட்ட மதிப்பீடு மற்றும் பண்புவகை சார்ந்த மதிப்பீடு வேறுபடுத்துக.

25. கற்றல் இயலாதோர்களைக் கண்டறிய உதவும் அறிகுறிகள் யாவை ?

26. மாணவர்களிடம் ஒலிகளை சரியாக உச்சரிக்க எம்மாதிரியான பயிற்சி அளிப்பாய் ?

27. உடல் ஊனமுற்ற குழந்தைகளின் நலம் காப்பதில் பெற்றோர் - ஆசிரியரின் பங்கு பற்றி விளக்குக.

[ Turn over

## பகுதி - இ

III. கீழ்க்கண்ட **மூன்று** வினாக்களுக்கு விடையளிக்கவும். ஒவ்வொன்றிற்கும் 500 வார்த்தைகளுக்கு மிகாமல் விடையளிக்கவும். **3x10=30**

28. (அ) பல்வேறு மாதிரிகளைப் பயன்படுத்தி உன் வகுப்பறை கற்றல் கற்பித்தலை எவ்வாறு மேம்படுத்துவாய் என்பதை தகுந்த உதாரணத்துடன் விளக்குக.

**அல்லது**

(ஆ) ஒரு ஆசிரியர் அன்பானவராக, ஆதரவளிப்பவராக, நம்பிக்கையூட்டுபவராக இருக்க வேண்டும். ஏன் ?

29. (அ) பல் வகுப்புக் கற்பித்தல் சூழலை எளிமையாகக் கையாளுவதற்கு மூன்று வகையான கற்றல் நிகழ்வுகளை எவ்வாறு நடைமுறைப்படுத்துவாய் என்பதை விளக்குக.

**அல்லது**

(ஆ) வகுப்பறை கற்பித்தல் செயல்பாட்டில் பொது நோக்கம் மற்றும் நடத்தை நோக்கம் இவற்றை ஆசிரியர் புரிந்து கொள்வது அவசியம். ஏன் ? விளக்குக.

30. (அ) உடலியக்கக் குறைபாடுகளைக் களைய ஆசிரியர்கள் கையாள வேண்டிய அணுகுமுறைகளை விளக்குக.

**அல்லது**

(ஆ) மாணவர்களின் கற்றல் கற்பித்தலை மதிப்பிட உதவும் பல்வேறு வகையான வினா வகைகள் யாவை ? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

- o O o -